அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 06/2004(1)

எனது இல:EST-9/DICIP/6/55
அரசாங்க நிர்வாக
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2011.12.30

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்

.

**<u>தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தை திருத்துதல்</u>**

மேற்படி விடயம் தொடர்பில் 2004.12.15 ஆந் திகதியைக் கொண்ட ஆம் 06/2004 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளில் பின்வரும் திருத்தங்களைச் செய்து தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று 2011.11.09 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அதற்கிணங்க, தற்போது குற்றப் பத்திரம் அனுப்பப்பட்டுள்ள ஒழுக்காற்று விசாரணைகளுக்கு பாதகம் ஏற்படாத விதத்தில் தாபன விதிக்கோவையின் II ஆம் பாகத்தின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 22:1:1 உப பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

22:1:1 குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரொருவருக்கு எதிராகக் குற்றப் பத்திரமொன்று வழங்கி ஒரு வருட காலத்தினுள் விசாரணையை முடிவுறுத்தி ஒழுக்காற்றுக் கட்டளை வழங்குவதற்கு ஒழுக்காற்று அதிகாரி வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். 31:11 ஆம் உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள ஒரு குற்றச்சாட்டாக அல்லாதவிடத்து குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் தாமதத்தால் விசாரணை தாமதப்படும் சந்தர்ப்பங்களைத் தவிர வேறு ஏதேனுமொரு விடயத்தால் அவ்வாறு விசாரணையை முடிவுறுத்தி ஒழுக்காற்றுக் கட்டளை வழங்க ஒரு வருடத்திற்கு மேல் கால தாமதம் ஏற்டுமாயின் குற்றஞ்சாட்டப்பட்டவர் பணித் தடைக்கு ஆளாகியும் இருப்பின் ஒழுக்காற்று விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களின் கீழ், ஒழுக்காற்று அதிகாரியின் விருப்பத்தின் பேரில் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரை மீளச் சேவையில் அமர்த்தி சம்பளம் வழங்க முடியும். அதுவரை செலுத்தப்படாத சம்பளங்கள் தொடர்பில், ஒழுக்காற்றுக் கட்டளை கிடைத்ததன் பின்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

03. 2010.06.22 ஆந் திகதியைக் கொண்ட 07/2010 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்டவாறான தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 19:5 ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, விசாரணை அலுவலர் குழாம் ஒன்றை வைத்திருப்பது, அவ்வத்தியாயத்தின 19:6 ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க தனியான விசாரணை அலுவலர்களின் பெயர்ப் பட்டியலொன்றை வைத்திருப்பதற்கான அரச சேவை ஆணைக்குவின் உரிமையை குறைத்து மதிப்பிட்டதாக அமையமாட்டாது.

ஒப்பம் / பீ.பி.அபேகோன்,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.